2005 ஏப்ரல் 13]

353—

மறுவாழ்வு இல்லங்கள்

***14961—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் ஊனமுற்றவர்கள், ஆதரவற்றவர்களுக்கு மறுவாழ்வு இல்லங்கள் திறக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் ஊனமுற்றவர்கள், ஆதரவற்றவர்களுக்கு மறுவாழ்வு இல்லம் புதிதாகத் திறப்பது குறித்து அரசிடம் கருத்துரு ஏதும் பரிசீலனையில் இல்லை. (ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.*

முற்பகல் 11–15

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது ஊனமுற்றவர்கள் உணவுக்குக்கூட வழி இல்லாமல் அவதிப்படக்கூடிய நேரம். எவ்விதத் தொழிலும் அவர்கள் செய்ய முடியாத நிலையிலே வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், தனக்கு வாரிசு இல்லாதவர்கள் வயதான காலத்திலே அவர்கள் உணவுக்கும்கூட வழி இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய அவல நிலை தொடர்ந்து கொண்டிருக்கிறது. இப்படி வாழ்நாள் முழுவதும் உழைத்துவிட்டு, வயதான காலத்திலே உழைக்க முடியாமல், சாப்பாட்டுக்கு வழி இல்லாத நிலை இருக்கிறது. சிலருக்கு வாரிசுகள் இருந்தாலும்கூட, அந்த வாரிசுகள் வெளி மாநிலங்களுக்குச் சென்று வருடக் கணக்கிலே பிழைப்பைத் தேடி அலைந்து கொண்டிருக்கின்ற சூழ்நிலையில் இருக்கிறார்கள். ஊரில் அவர்களுடைய பெற்றோர்கள் உணவுக்கு வழியில்லாது இருக்கக்கூடிய

இந்தச் சூழ்நிலையில் இப்படி ஊனமுற்றவர்களும், ஆதரவற்றவர்களும் வாழ்வதற்காக மறுவாழ்வு இல்லங்கள் பல்வேறு நிலைகளிலே தொடங்கப்பட்டு வரக்கூடிய இந்தச் சூழ்நிலையில் மிகப் பின்தங்கிய பகுதியான பெண்ணாகரம் தொகுதியிலே ஒரு மறுவாழ்வு இல்லம் தொடங்குவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தில், தற்சமயம் செல்லியம்பட்டி மற்றும் பர்கூர் ஆகிய இடங்களில் தொழுநோயால் ஊனமுற்றோரைக் கொண்ட அரசு மறுவாழ்வு இல்லங்கள், இரண்டு இயங்கி வருகின்றன. தற்சமயம் செல்லியம்பட்டி அரசு மறுவாழ்வு இல்லத்தில் 220 பேரும், பர்கூர் அரசு மறுவாழ்வு இல்லத்தில் 223 இல்லவாசிகளும் தங்க வைக்கப்பட்டுள்ளனர். மேற்காணும் இல்லங்களில் தற்போது குறைவாக இல்லவாசிகள் உள்ளமையால் தருமபுரி மாவட்டத்தில், பெண்ணாகரம் தொகுதியில் புதிதாக அரசு மறுவாழ்வு இல்லம் திறக்கும் தருவாயில் அரசு இல்லை என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழுநோயாளிகளுக்கான மறுவாழ்வு இல்லங்களைப் பற்றி அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால், ஆதரவற்றவர்கள் வாழ்வதற்காக, அவர்கள் பிழைப்பிற்காக மறுவாழ்வு இல்லங்கள் தொடங்குவதற்கு அரசு மறுபரிசீலனை செய்து, அந்தப் பகுதியிலே தொடங்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இதுபோன்ற ஆதரவற்றோர், முதியவர்களுக்கு அரசு சார்பாகவும் மற்றும் தனியார் தொண்டு நிறுவனங்கள் மூலமும் ஆதரவற்ற முதியோர் இல்லங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. தனியார் தொண்டு நிறுவனங்கள், இதுபோன்ற ஆதரவற்ற முதியோர்களுக்கு தொண்டு நிறுவனங்கள் ஆரம்பிப்பதற்கு முன் வந்தால், அதற்கு ஒருசில நிபந்தனைகள் இருக்கின்றன. அந்த நிபந்தனைகளுக்கு உட்பட்டு, இந்தத் தனியார் தொண்டு நிறுவனங்கள் இதுபோன்ற இல்லங்கள் ஆரம்பிப்பதற்கு முன்வந்தால் அரசு நிச்சயம் உதவி செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 354, திரு. எஸ். மகாலிங்கம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.